14th December 1961]

The Prime Minister was addressed clarifying the stand of this Government that it should be made clear beyond all misunderstanding that there was no proposal whatsoever to abandon the use of any of the existing non-Devanagiri script, for any of the purposes for which they are at present used in different States.

Fertilizer (distribution)

* 2349 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் உர விநியோகம் செய்யப்படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) அப்படியானல், காரணமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No, Sir. Chemical fertilizers are being distributed through multi-purpose societies, marketing societies, agricultural banks, etc.

(இ) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : சமீபத்திலே நடந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாட்டிலேகூட இதைப் பிரதானமாக கிளப்பியிருக்கிருர்கள். ஆகவே, அந்த நேரத்திலே கனம் முதல் அமைச்சர் அவர்கள்கூட இங்கே கேட்கப்பட்ட கேள்விகள் எல்லாம்கூட பரிசீலனை செய்து ஆவன செய்வோம் என்று சொன்னுர்கள். ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து அதைப்போல் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சில புள்ளிவிவரங்களைக் கொடுத்தால், இன்றைக்கு இருக்கிற நிலைமை தெரியும். 1891 பிரைமரி சொஸைடிகளில் இப்போது உரம் விநியோகம் செய்கின்றுர்கள. அதில் 1,437 சொஸைடிகள பலநோக்கு கூட்டுறவு சொஸைடிகளாகும். நானூற்று எண்பத்தி நான்கு பாக்கி இருக்கிறது. அவைகள் மார்க்கட்டிங் சொசைடிகள், அக்ரிகல்சுரல் பாங்கு அண்டு ஸ்டோர்ஸ் ஆகும். ஆகவே, பெரியளவிலே கூட்டுறவு சொஸைடிகள் மூலமாகத்தான் நடக்கின்றது. சாதாரணமாக புகார் சொல்கிறவர்கள், ஒன்றிரண்டு கிராமங்களிலே இருக்கக்கூடியதைச் சொல்லக்கூடும். அதைத்தான் முதல் மந்திரி அவர்கள் பரிசீலனை செய்வதாகச் சொல்லி இருக்கிருர்கள்.

DEPUTY SPEAKER : Questions 2350 and 2353 are postponed.

Waram cultivators (loans)

* 2351 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ம் தேதியில் நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 1904-க்கு அளித்த பதிலை யொட்டி வாரம் பயிரிடுபவர்களுக்கு பயிர்களின்மீது கடன் தரும் திட்டத்திற்காக 1961-62-ல் ஒதுக்கிய பணம் எவ்வளவு ?

[14th December 1961

(இ) செலவிடப்பட்ட பணம் எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) As already pointed out in the answer to Legislative Assembly Question No. 1904 on the floor of the House on 29th September 1961, it is not the practice with the Co-operative Societies to earmark in advance any fixed amount for the issue of various kinds of loans to the members.

(இ) During the Co-operative Year 1960–61, i.e., 1st July 1960 to 30th June 1961, loans amounting to Rs. 115·20 lakhs were issued to cultivating tenants by the co-operatives. During the current co-operative year, loans to the extent of Rs. 32.89 lakhs were issued to the landless and cultivating tenants for the three months from 1st July to 30th September 1961.

SRI S. M. ANNAMALAI : ஸார், இதற்கு முன்பு பதிலளிக்கின்ற போது, வாரம் பயிரிடுவோருக்கு டெனன்ஸி ரைட் இல்லாத காரணத்தினலே அவர்கள் இந்தக் கடன் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, டெனன்ஸி ரைட் இருக்கக்கூடிய மசோதாவை சர்க்கார் கொண்டு வரப்போவதாகச் சொன்னூர்கள். அவர்கள் அதிக பலனடைவதற்கு, இதை இன்னும் எப்போது கொண்டுவரப் போகிறூர்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : சென்ற முறை பதில் சொல்கின்ற போது, நிலவுடமை இல்லாதவர்களுக்கு கடன் கொடுப்பதிலே கஷ்டமிருக்கிறது என்றும், அதை மாற்றியமைப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுப்பதாகவும் சொன்னூர்கள். இப்போது அந்த முயற்சி வெற்றியடைந்து, நிலவுடமை இல்லாதவர்கள் அதாவது குத்தகைக்காரர்கள், வாரம்தார்கள் ஆகிய இவர்களுக்குக்கூட கடன் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேம். அதன்படி 1960-61-ம் வருஷம் 1,20,000 லாண்டுலெஸ் கல்டிவேடிங் டெனன்டுகளுக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷத்திலே ஜூலை முதல் செப்டம்பர் வரையிலே 33,357 பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஸ்கீம் இப்போது நடைமுறையிலே இருக்கிறது.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், கொடுக்கப்படுகின்ற கடன் எந்த ரீதியிலே கொடுக்கப்பட்டு, வசூலிக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அவர்கள் மகசூலை பாங்குக்கு அடமானம் கொடுக்கிறூர்கள். ஆகவே, மகசூலைக் கொண்டு வந்து பாங்கிடம் கொடுத்து அதன்மூலம் கடன் திருப்பி வசூலிக்கப்படுகிறது.

Price Fixation Committee

* 2352 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் ஏற்படுத்தப்பட்ட விலைவாசிகள் நிர்ணயக் கமிட்டி தன் அறிக்கையை சர்க்காருக்கு அனுப்பியுள்ளது உண்மையா?